**த. நா.ச.பே. எண் : 013** **நாள் : 22.03.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (22.3.2018) சட்டப்பேரவையில், விழுப்புரம் மாவட்டம், வெள்ளாம்புதூர் கிராமத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் பள்ளி மாணவன் கொலை செய்யப்பட்டு, அவரது தாய் மற்றும் சகோதரி காயப்படுத்தப்பட்டது குறித்து விளக்கம் அளித்தார்கள்**

---

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

விழுப்புரம், வெள்ளாம்புதூர் கிராமத்தில் திருமதி.ஆராயி என்பவரும் 8ஆம் வகுப்பு படிக்கும் அவரது மகள் செல்வி.தனம் மற்றும் 4ஆம் வகுப்பு படிக்கும் அவரது மகன் செல்வன். சமயன் ஆகியோரும் 22.2.2018 அன்று காலை வீட்டிலிருந்து வெளியே வராத காரணத்தினால், சந்தேகமடைந்த திருமதி. ஆராயியின் உறவினர் திரு. காசி என்பவர், வீட்டிற்குள் சென்று பார்த்தபோது திருமதி. ஆராயி மற்றும் அவரது இரண்டு குழந்தைகள் ரத்த காயங்களுடன் கிடந்ததைப் பார்த்துள்ளார். அவர்களுள் சிறுவன் சமயன் இறந்து கிடந்து உள்ளார். உடனடியாக திரு. காசி, காயமடைந்த இருவரையும் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார். பின்னர் அவர்கள் இருவரும் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் மேல் சிகிக்சைக்காக கொண்டு செல்லப்பட்டு, அங்கு தற்போது சிசிக்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக திரு. காசி அளித்த புகாரின் பேரில் அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, தடயவியல், விரல் ரேகை நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் பிரிவினர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு, தடயங்கள் சேகரிக்கப்பட்டன.

இந்த துயரச் சம்பவம் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, துரிதமாக குற்றவாளிகளை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தருமாறு காவல் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இதன் பேரில், காவல் துறையினர், 4 தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை கண்டுபிடித்து கைது செய்ய, தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் சமயன் குடும்பத்திற்கு இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் திருமதி. ஆராயி மற்றும் செல்வி. தனம் ஆகியோருக்கு தலா 50,000/– ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என தெரிவித்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நிவாரணத் தொகை போதவில்லை இதை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டு இருக்கின்றார். இதை அரசு பரிசீலிக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**